முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1304

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

25.04.2023, செவ்வாய்கிழமை

1. பிரணவ சக்திமிகு குருராஜா
பிரணவக் குடில் படைத்த தவராஜா
சரவணச் சுடரேற்றி உலகோர்க்கு
சற்குருவாய் வாழுகின்ற அரங்க ராஜா
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு
அருளுவேன் சுப்ரமணியர் யானும் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் சித்திரை மாதம் 12 ம் நாள், 25.04.2023 செவ்வாய்கிழமை)
வரமாக அரங்கன் உன்னுள் யானிருந்து
வையகத்தைக் காக்கும் வள்ளல் தன்மையாக
3. ஆகவே தொண்டர்கட்கு தீட்சையாக
ஆற்றல்பட உருமாறி உலகமெல்லாம்
ஜெகமெங்கும் தர்மத்தை வளர்க்கும் வண்ணம்
சித்தியாக உன் தொண்டர்களைக் கொண்டு அருளிவர
4. வருகின்ற இந்த வையகம் அரங்கன் தொண்டர்களை
வணங்கி ஏற்று வழிமொழிந்து தர்மத்தை
பெருமைபட உலகெல்லாம் பரவச்செய்தால்
பேருலகம் தர்மஞான லோகமாகி
5. ஆகியே அரங்கன் வேதத்தின்வழி ஆற்றல்பட கலியுகம் இடர்களைக் கடந்து
அரங்கனால் ஞானயுகமாற்றம் காணும்
காணவே அரங்கன் தொண்டர்களைக் கொண்டே கலியுகத்தில் அற்புதத்தை யான் நடத்தி
ஞானவான்கள் மிகுந்த ஞானபூமியாக ஞானிகள் ஞானசித்தர்கள் காலம் கனியும் வண்ணம்
6. வண்ணமுடன் ஞானவான்கள் வழிநடத்த
வல்லமை கொண்ட ஞானஆட்சி தனையும்
பெருமைபட ஆறுமுகன் யான் உலகில் நடத்தி
பிறவிகொண்ட அரங்கன் அவதார நோக்கம் தன்னை

7. தன்னையே வரமாக ஆறுமுகன் யான்
தக்கபடி பூர்த்திசெய்து தொண்டர்களும்
அச்சமற மகிழும் வண்ணம் ஏற்கும் வண்ணம்
ஆற்றல்பட ஆறுமுகன் யான் அற்புதம் நிகழ்த்துவேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–